**<u>சுருக்கம்</u>**

பள்ளிக் கல்வி – அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் ஆசிரியரின்றி உபரியாகவுள்ள 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் – முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர் நிலை–1 பணியிடங்களாகத் தரம் உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்(ப.க2(2)) துறை

அரசாணை (நிலை) எண்.18

நாள் 01.02.2021
திருவள்ளுவராண்டு 2052
சார்வரி வருடம், தை – 19

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண்.525, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29.12.1997.
2. அரசாணை (நிலை) எண்.46, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14.05.2004.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.048332/டபிள்யு2/இ3/2019, நாள் 11.12.2019, 28.01.2020, 14.02.2020 மற்றும் 21.10.2020.

------

<u>ஆணை :–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வித் துறையில் அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியிடங்கள் நிர்ணயம் செய்திட நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆசிரியர்களின் வேலைப்பளுவின் அடிப்படையில் பாட வேளைகள் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.03.2020 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை சார்ந்த மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பிறவற்றினிடையே பின்வரும் அறிவிப்பினை அறிவித்துள்ளார்:–

> "பள்ளி மாணவர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதன் காரணமாக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதை கவனத்தில் கொண்டு, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.11 கோடி கூடுதல் செலவில் தரம் உயர்த்தப்படும்."

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் 01.08.2019 அன்றைய நிலவரப்படி, மேலே ஒன்று முதல் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடவேளைக்கு ஏற்ப பணியாளர் நிர்ணயம் செய்வது குறித்து கணக்கீடு செய்யப்பட்டதில், அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு தற்போது மொத்தம் 1984 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் / உடற்கல்வி இயக்குநர் (முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில்) பணியிடங்கள் கூடுதலாகத்

தேவைப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார். மேலும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 10 வகுப்புகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (RTE ACT 2009) மற்றும் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். மேலும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–இன்படி, குழந்தைகளின் குடியிருப்பில் இருந்து 3 கி.மீ. தொலைவில் நடுநிலைப் பள்ளி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த 8 ஆண்டுகளில் 946 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்றும், இதன் விளைவாக பல உயர்நிலைப் பள்ளிகளில் படித்து வந்த 6 முதல் 8–ஆம் வகுப்பு மாணாக்கர்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் நிலை உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளில் பரவலாக சேர்ந்துள்ளனர் என்றும், இதனால், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததால் அரசால் அனுமதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியரின்றி உபரியாகக் கண்டறியப்பட்டுள்ளன என்றும், அக்காலிப் பணியிடங்கள், சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களால் சரண் செய்யப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் பொதுத் தொகுப்பில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன என்றும், இந்த 1575 உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தொடர் நீட்டிப்பில் உள்ளன என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. 2018–19-ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றுள்ளதால், அப்பள்ளிகளுக்கு வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் பாட ஆசிரியர் பணியிடங்களை கூடுதலாக அனுமதிக்கும் வகையிலும், ஏற்கனவே செயல்பட்டு வரும் இதர மேல்நிலைப் பள்ளிகளில் அதிகளவில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் கூடுதல் பாட வேளைகள் இருப்பதால், அம்மாணவர்களுக்கு பாடம் போதிக்க வேண்டி, அப்பள்ளிகளுக்கு கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்களை அனுமதிக்க ஏதுவாக ஆசிரியரின்றி உபரியாக கண்டறியப்பட்டுள்ள 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர் நிலை–1 (முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில்) பணியிடங்களாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்:–

| வ. எண். | பாடத்தின் பெயர் | கூடுதலாகத் தேவைப்படும் முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ் | 170 |
| 2. | ஆங்கிலம் | 200 |
| 3. | இயற்பியல் | 88 |
| 4. | வேதியியல் | 98 |
| 5. | உயிரியல் | 61 |
| 6. | தாவரவியல் | 59 |
| 7. | விலங்கியல் | 103 |
| 8. | புவியியல் | 14 |
| 9. | கணிதம் | 34 |
| 10. | மனையியல் | 01 |
| 11. | வரலாறு | 42 |

| | | |
|---|---|---|
| 12. | பொருளியல் | 132 |
| 13. | அரசியல் அறிவியல் | 08 |
| 14. | வணிகவியல் | 500 |
| 15. | உடற்கல்வி இயக்குநர் நிலை–1 | 65 |
| மொத்தம் | | 1575 |

6. மேலும், 1,575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தி அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும் பட்சத்தில், 50 சதவீதம் பணியிடங்களை பதவி உயர்வு மூலமாக நிரப்பிடும் பொருட்டு 2021–22–ஆம் கல்வியாண்டு துவங்கும் ஜீன் 2021–ஆம் மாதத்தில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பூர்த்தி செய்யும் வகையிலும், மீதமுள்ள 50 சதவீத பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நேரடியாக தேர்ந்தெடுத்து நியமனம் செய்திடும் வகையிலும், 2020–21–ஆம் கல்வியாண்டிலேயே 1575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தி ஆணை வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

7. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை கீழ்க்கண்டவாறு தரம் உயர்த்தி அரசு ஆணையிடுகிறது :–

அ) அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை ஊதியம் ரூ.36,400 – 1,15,700 (நிலை 16) என்ற ஊதிய நிலையில் அரசால் அனுமதிக்கப்பட்டு ஆசிரியரின்றி உபரிப் பணியிடங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ள இவ்வரசாணையின் இணைப்பு–I–இல் உள்ள 1,575 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை, அடிப்படை ஊதியம் ரூ.36,900 – 1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் (முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில்) பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுகிறது. தரம் உயர்த்துவதால் அரசுக்கு ரூ.1,10,56,500/– கூடுதல் செலவினம் ஏற்படும் (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்து ஐம்பத்தாராயிரத்து ஐநூறு மட்டும்).

ஆ) மேற்கண்டவாறு தரம் உயர்த்தப்படும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் 50 சதவீத பணியிடங்களை பதவி உயர்வு மூலமாக 2021–2022 கல்வியாண்டில் நிரப்பிட அனுமதி வழங்கப்படுகிறது.

இ) மீதமுள்ள 50 சதவீத முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நேரடி நியமனம் முறையில் நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களை 2020–2021–ஆம் கல்வியாண்டில் தெரிவு செய்திடவும், 2021–2022–ஆம் கல்வியாண்டில் பணி நியமன ஆணை வழங்கி அப்பணியிடங்களை நிரப்பிடவும் அனுமதி வழங்கப்படுகிறது.

ஈ) தரம் உயர்த்தப்பட்ட 1575 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் (முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில்) பணியிடங்களை, இவ்வரசாணையின் இணைப்பு–II-இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு பாடவாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

8. தரம் உயர்த்தப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் (முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நிலையில்) கூடுதல் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

i. <u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

"2202–பொதுக்கல்வி– 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– மாநிலச் செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்– 301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம். IFHRMS(த.தொ.கு 2202–02–109 AA 30101)"

ii. <u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு:–</u>

"2202–பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி– 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்– மாநிலச் செலவினங்கள் – AB நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்–301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம். IFHRMS (த.தொ.கு. 2202–02–109–AB–30101)"

9. மேலே பத்தி–7–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப் பணி (NEW INSTRUMENT OF SERVICE) குறித்ததாகும்." துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி (Contingency Fund) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணம் ஒப்பளிப்புக்கான ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். உடனடி செலவுக்கான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெறுவதற்கு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதித்(வரவு – செலவு பொது–1) துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2020–21–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் தவறாது நிதித் (கல்வி–II) துறைக்கு அனுப்பிட பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2355/கல்வி–II/2021, நாள் 30.01.2021 மற்றும் அ.சா.எண்.4786/மை.ம.ஆ.பி/2021, நாள் 29.01.2021–இல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1578 (ஆயிரத்து ஐநூற்று எழுபத்தெட்டு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.

சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:–

நிதிக் (கல்வி–II / வரவு–செலவு பொது I/II/ வ.வ.I/மை.ம.ஆ.பி)துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர்நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளரின் முதுநிலை முதன்மை தனி செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி /அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
01/02/2021